# தமிழ்நாட்டுக்குள் சங்கிகளையும் அடிமைகளையும் நுழைய விடக்கூடாது:

# உங்கள் பகுதியில், உங்களின் தெருக்களில் நீங்கள் பார்க்கும் அத்தனை பேரிடமும் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு சேகரியுங்கள்!

## சோழிங்கநல்லூர் சட்டமன்ற வேட்பாளர் அரவிந்த் ரமேஷை ஆதரித்து
## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!





**சென்னை, ஏப். 22 -**

**சென்னை, சோழிங்கநல்லூரில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், நேற்று முன்தினம் சோழிங்கநல்லூர் சட்டமன்ற வேட்பாளர் ச.அரவிந்த் ரமேஷை ஆதரித்து, உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து, பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``தமிழ்நாட்டுக்குள் அடிமைக் கூட்டத்தையும், சங்கிகள் கூட்டத்தையும் நுழைய விட்டுவிடக்கூடாது என்கிற பிரச்சாரத்தை நீங்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்துப் பேசுங்கள். நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த இரண்டு நாட்கள், உங்களின் பகுதியில், உங்களின் வீடுகளில், உங்களின் தெருக்களில் யார் யாரையெல்லாம் பார்க்கிறீர்களோ அவர்கள் அத்தனை பேரிடமும் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு கேளுங்கள்" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:**

முதலில் இவ்வளவு சிறப்பான, அன்பான வரவேற்பைக் கொடுத்திருக்கக்கூடிய அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### உதயசூரியன் சின்னம்

*20 நாட்களாக, கிட்டத்தட்ட 120 சட்டமன்றத் தொகுதிகளுக்கு நேரடியாகச் சென்று அங்கே இருக்கக்கூடிய நம் வெற்றி வேட்பாளர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலும், நம் கூட்டணிக் கட்சி சின்னத்திலும் வாக்கு கேட்டுவிட்டு, இன்றைக்கு, சோழிங்கநல்லூர் தொகுதிக்கு உங்களையெல்லாம் சந்திப்பதற்கு அரவிந்த் ரமேஷ் அவர்களை உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களித்து வெற்றி பெற வைக்க வேண்டும் என்று உங்களிடம் கேட்க வந்திருக்கிறேன்.*

*நான் உங்களிடம் கேட்க வந்தேன். ஆனால், நீங்கள் ஏற்கெனவே முடிவு செய்துவிட்டீர்கள் என்று தெரிகிறது. உதயசூரியன் சின்னத்தில் கடந்த முறை அண்ணன் அவர்களைக் கிட்டத்தட்ட 36,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்தோம். இந்த முறை நம் இலக்கு குறைந்தது ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்க வேண்டும்.*

*நான் அரவிந்த் ரமேஷ் அவர்களை உங்களிடம் அறிமுகப்படுத்தலாம் என்று வந்தேன். ஆனால், உங்கள் அத்தனை பேருக்கும் தெரிந்தவர்தான் அண்ணன் அரவிந்த் ரமேஷ் அவர்கள். இந்தத் தொகுதியின் ஒவ்வொரு தெருவையும், ஒவ்வொரு வீட்டையும், ஒவ்வொரு வாக்காளரையும் தெரிந்து வைத்திருக்கக்கூடியவர் அண்ணன் அரவிந்த் ரமேஷ் அவர்கள். ஏதோ தேர்தலுக்குத் தேர்தல் மட்டும் உங்களை வந்து பார்க்கிறவர், மக்களை வந்து பார்க்கிறவர் கிடையாது அவர். வருடம் முழுவதும் உங்களோடு பயணிக்கக்கூடியவர், உங்களின் சுக துக்க நிகழ்ச்சி அத்தனையிலும் பங்கேற்று, உங்களின் குடும்பத்தில் ஒருவராக இருக்கக்கூடியவர். ஒவ்வொரு குடும்பத்துக்கும் உதவ வேண்டும் என்று கிட்டத்தட்ட 24 மணி நேரம் உழைக்கக்கூடியவர், களத்தில் நிற்கக்கூடியவர் அண்ணன் அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

### பல்வேறு நிகழ்ச்சிகள்

*என்னிடமும் தலைவரிடமும் உரிமையோடு பேசி, இந்தத் தொகுதிக்கு, இந்தப் பகுதிக்கு என்னவெல்லாம் வேண்டும், என்னவெல்லாம் கோரிக்கை, அதையெல்லாம் எப்படி நிவர்த்தி செய்ய வேண்டும் என்கிற அந்த வித்தை தெரிந்தவர்தான் அண்ணன் அரவிந்த் ரமேஷ் அவர்கள். என்னை அடிக்கடி இந்தப் பகுதிக்கு வரவழைத்து, இந்தப் பகுதியிலேயே பல்வேறு நிகழ்ச்சிகளில் இந்தக் கடைசி ஒரு வருடத்தில் மட்டும் பல்வேறு நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கிறேன். எனவே, அண்ணன் அரவிந்த் ரமேஷ் அவர்களை உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்க வேண்டும்.*

*மீண்டும் அரவிந்த் ரமேஷ் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள். மீண்டும் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களியுங்கள் என்று ஏன் உரிமையோடு கேட்கிறோம் என்றால், இந்தப் பகுதிக்கு அவ்வளவு திட்டங்களை, வேலைகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். நம் முதலமைச்சர் செய்து கொடுத்திருக்கிறார், உங்களின் சட்டமன்ற உறுப்பினர் செய்து கொடுத்திருக்கிறார். உதாரணத்துக்குச் சில விஷயங்களை மட்டும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.*

### சோழிங்கநல்லூர் திட்டங்கள்

*66 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பெரும்பாக்கத்தில் அரசு புறநகர் மருத்துவமனை கொண்டு வந்தது உங்களின் சட்டமன்ற உறுப்பினரின் உழைப்பு.*

*165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரும்பாக்கம், ஒட்டியம்பாக்கம், செம்மஞ்சேரி பகுதியில் மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்றிருக்கிறது என்றால்,*

*அது அண்ணன் அரவிந்த் ரமேஷ் அவர்களின் முயற்சி.*

*58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிக்கரணை ஏரி பகுதியிலிருந்து சதுப்புநிலப் பகுதிக்கு, இன்றைக்கு மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

*1,338 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் தொகுதிக்கு உட்பட்ட மாநகராட்சி மண்டலங்களில் மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த இரண்டு மண்டலங்களில் 1,283 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம், குடிநீர் வழங்கல் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*திருவான்மியூர் முதல் உத்தண்டி வரைக்கும் உயர்மட்டப் பாலம் நம் திராவிட மாடல் அரசு கட்டிக் கொடுத்திருக்கிறது.*

*பல்லாவரம்-துரைப்பாக்கம் ரேடியல் சாலை, ஓ.எம்.ஆர். ஈ.சி.ஆர். (OMRECR) இணைப்புச் சாலையில் கே.கே.சாலை, செம்மொழிச் சாலையில் பெருமூடு மழைநீர் கால்வாய் பணி நடந்துகொண்டு இருக்கிறது.*

*44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிக்கரணை நாராயணபுரம் ஏரியிலிருந்து சதுப்புநிலப் பகுதிக்கு மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி.*

> **மீண்டும் தி.மு.க ஆட்சி!**
>
> **மீண்டும் தி.மு.க ஆட்சி அமைக்கப் போவது உறுதி. மீண்டும் நம் தலைவர்தான் முதலமைச்சராக வரப்போவது உறுதி. அதற்கு மேலும் வலு சேர்க்கிற விதமாக அண்ணன் அரவிந்த் ரமேஷ் அவர்களுக்கு வாக்களித்து, இந்த முறையும் சட்டமன்றத்துக்கு நீங்கள் அனுப்ப வேண்டும்.**

*மெட்ரோ இரயில் பணிகள் இப்படிப் பல்வேறு பணிகளை நடத்திக் கொடுத்திருக்கிறோம்.*

*கண்ணகி நகர், எழில் நகர், செம்மஞ்சேரி, பெரும்பாக்கம் ஆகிய இடங்களில் பூங்காக்கள், விளையாட்டுத் திடல், நூலகம், சமுதாய நலக்கூடம், சின்டெக்ஸ் தொட்டி உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை உங்களின் சட்டமன்ற உறுப்பினர் உங்களுக்காகச் செய்து கொடுத்திருக்கிறார்.*

*சோழிங்கநல்லூர், செம்மொழிச் சாலை, பெருங்குடி, துரைப்பாக்கம் பகுதிகளில் சுங்கச்சாவடிகள் அகற்றப்பட்டிருக்கின்றன.*

*இவ்வளவும் செய்து கொடுத்துவிட்டு, மீண்டும் ஒரு வாய்ப்புக் கொடுங்கள் என்று உங்களிடம் கேட்டு வந்திருக்கிறோம். இந்தத் தொகுதிக்கு இப்படி பல திட்டங்களை செய்திருக்கிறோம். தமிழ்நாடு முழுக்க, பல்வேறு திட்டங்களை, பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறோம்.*

### முதல் கையெழுத்து

*ஆட்சி அமைந்தவுடனேயே, நம் முதலமைச்சர் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து திட்டம். கடந்த சட்டமன்றத் தேர்தலில் நாம் சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றியிருக்கிறோம். மகளிர் ஒவ்வொருவரும் மாதம் 900 ரூபாய் வரைக்கும் சேமித்திருக்கிறார்கள்.*

*அரசுப் பள்ளியில் குழந்தைகளுக்குக் காலை உணவுத் திட்டம்.*

*அரசுப் பள்ளியில் படித்துவிட்டு கல்லூரிகளுக்குப் படிக்கப் போனால் அவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகை மாதம் 1,000 ரூபாய்.*

*சமீபத்தில் மூன்று மாதங்களுக்கு முன்பு 10 இலட்சம் கல்லூரி மாணவமாணவிகளுக்கு இலவச மடிக்கணினி திட்டத்தை அறிவித்து, ஒரே மாதத்தில் நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.*

*மகளிர் உரிமைத் தொகை திட்டம். இன்றைக்கு மாதம் மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையாக ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்கு நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நிறுத்துவதற்கு அ.தி.மு.கவும், பா.ஜ.கவும் முயற்சி செய்தார்கள். ஆனால், நம் தலைவர் என்ன செய்தார்? பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என மூன்று மாதத்துக்குச் சேர்த்து 3,000, கோடைக்காலச் சிறப்பு நிதி 2,000 என 5,000 ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள்.*

### 23- ஆம் தேதி முதல் வேலை

*முதலமைச்சர் காலையில் 6 மணிக்கு வங்கியில் பணம் போட்டார். மகளிர் எல்லாம் 9 மணிக்கெல்லாம் வங்கிக்குச் சென்று பணத்தை எடுத்துவிட்டார்கள். ஏன்? மகளிர் அவ்வளவு கவனமானவர்கள். மோடி அரசு வங்கியில் குறைந்தபட்ச இருப்பு இல்லை என்று சொல்லி உரிமைத் தொகையை எடுத்துவிடப்போகிறார்கள் என்று மகளிர் அவ்வளவு விழிப்புடன் போய் பணத்தை எடுத்தார்கள். அதே மாதிரி வரும் 23ஆம் தேதி முதல் வேலையாக வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்குப்பெட்டியில் முதல் பெயர் அண்ணன் அரவிந்த் ரமேஷ் அவர்கள் பெயர். அதற்குப் பக்கத்தில் உதயசூரியன் சின்னம் இருக்கும். அதில் வாக்களித்து மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்க வேண்டும். எப்படி வாக்குப்பெட்டியில் முதல் இடமோ, அதே மாதிரி 4ஆம் தேதி வாக்கு எண்ணிக்கையின்போதும் முதல் இடத்தில் அண்ணன் அரவிந்த் ரமேஷ் பெயர் இருக்க வேண்டும்.*

*சில வாக்குறுதிகளை நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார்கள், அதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.*

*மகளிர் உரிமைத் தொகை ஆட்சி அமைந்தவுடன் 1,000 ரூபாய் இல்லை, அதை 2,000 ஆக உயர்த்தித் தருகிறேன் என்று முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்.*

*கல்வி ஊக்கத்தொகை 1,000 ரூபாய் இல்லை 1,500ஆக உயர்த்தப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.*

*இல்லத்தரசி திட்டம். ஆட்சி அமைந்தவுடன் அனைத்து மகளிர் கைகளிலும் முதலமைச்சர் அவர்கள் 8,000 ரூபாய் உங்கள் பொறுப்பிலேயே ஒப்படைத்திருக்கிறார். வீட்டுக்கு என்ன மின்சாதனப் பொருட்கள் தேவை என்பதை மகளிர் நீங்களே முடிவு செய்து வாங்கிக்கொள்ளலாம் என்று முதலமைச்சர் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.*

### இலவச மடிக்கணினிகள்

*அடுத்த ஐந்து வருடத்தில் அனைத்து கல்லூரி மாணவமாணவிகளுக்கும் இலவச மடிக்கணினி கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.*

*இந்த வாக்குறுதி எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்றால், வரும் சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் தி.மு.க ஆட்சி அமைக்கப் போவது உறுதி. மீண்டும் நம் தலைவர்தான் முதலமைச்சராக வரப்போவது உறுதி. அதற்கு மேலும் வலு சேர்க்கிற விதமாக அண்ணன் அரவிந்த் ரமேஷ் அவர்களுக்கு வாக்களித்து, இந்த முறையும் சட்டமன்றத்துக்கு நீங்கள் அனுப்ப வேண்டும்.*

*23ஆம் தேதி தேர்தல். நீங்கள் அத்தனை பேரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டீர்கள். எல்லாவற்றையும்விட முக்கியம் தமிழ்நாட்டுக்குள் அடிமைக் கூட்டத்தையும், சங்கிகள் கூட்டத்தையும் நுழைய விட்டுவிடக் கூடாது என்கிற பிரச்சாரத்தை நீங்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்துப் பேசுங்கள். நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த இரண்டு நாட்கள், உங்களின் பகுதியில், உங்களின் வீடுகளில், உங்களின் தெருக்களில் யார் யாரையெல்லாம் பார்க்கிறீர்களோ அவர்கள் அத்தனை பேரிடமும் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்குக் கேளுங்கள். கடந்த ஐந்து வருடம் என்னென்ன திட்டங்கள் நம் தலைவர் செய்திருக்கிறார், மீண்டும் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன செய்வோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார் என்பதை எடுத்துக் கூறுங்கள்.உங்களின் பேச்சைக் கேட்டு அனைவரும் உதயசூரியன் சின்னத்துக்குத்தான் வாக்களிக்க வேண்டும்.*

### டெல்லி அணி vs தமிழ்நாடு அணி

*நம் தலைவர் மீண்டும் மீண்டும் சொல்வதுதான், இந்தத் தேர்தல் டெல்லி அணி vs தமிழ்நாடு அணி. டெல்லி அணியைத் தோற்கடிக்க வேண்டும், தமிழ்நாடு அணி நாம் வெற்றிபெற வேண்டும். நான் இவ்வளவு திட்டங்கள் சொன்னேன் அல்லவா, இவ்வளவு செய்திருக்கிறோம் அல்லவா? நினைத்துப் பாருங்கள், ஒன்றிய பா.ஜ.க அரசு ஏதாவது நமக்குத் துணையாக நின்றிருக்கிறார்களா? நமக்கான நிதியைக் கொடுக்கிறார்களா? தமிழ்நாட்டுக்குத் திட்டங்களைக் கொடுக்கிறார்களா? இப்போது தேர்தல் அறிவித்தவுடன் மோடியும் அமீத்ஷாவும் வாராவாரம் வந்துவிட்டுப் போகிறார்கள், நமக்கான நிதி வருகிறதா என்றால் வரவில்லை. கடந்த பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு என்று எந்தத் திட்டமும் இல்லை. கடந்த பட்ஜெட்டில் தமிழ்நாடு என்கிற பெயரே இல்லை. இதையெல்லாம் எதிர்த்துக் கேள்வி கேட்கக்கூடிய ஒரே தலைவர் நம் தலைவர்.*

### காலிலும் விழுகிற அனுபவம் இல்லை

*இப்போது சமீபத்தில் பார்த்திருப்பீர்கள், தொகுதி மறுவரையறையில் நாம்தான் எதிர்த்துக் கேள்வி கேட்டு அதில் வென்றும் காட்டினோம். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் என்ன செய்கிறார்? முரட்டு பக்தர்கள் பார்த்திருப்பீர்கள், முரட்டுத் தொண்டர்கள் பார்த்திருப்பீர்கள், ஒரு முரட்டு அடிமையைப் பார்த்திருக்கிறீர்களா? இதைத்தான் சொன்னேன், இதை மட்டும்தான் நான் சொன்னேன். மோடியின் நம்பர் ஒன் முரட்டு அடிமை எடப்பாடி பழனிசாமி என்றுதான் சொன்னேன். அதற்குத்தான் அவருக்குக் கோபம் வந்துவிட்டது. என்ன சொன்னார்? உதயநிதிக்கு எந்த அனுபவமும் இல்லை, ஒரு அனுபவமுமே இல்லாதவர் என்றார். நான் சொன்னேன், ஆமாம் எனக்கு அனுபவம் கிடையாது. உங்களைப் போல் எனக்கு அனுபவம் கிடையாது, இந்த அனுபவம் எனக்குக் கிடையாது என்று சொன்னேன். பதவிக்காக, பொறுப்புக்காக யார் காலிலும் விழுகிற அனுபவம் எனக்குக் கிடையாது. சங்கிகள் கூட்டத்திடம் பயந்து நடுங்குகிற அனுபவம் எனக்குக் கிடையாது என்றேன்.*

### உலகப் புகழ்பெற்ற புகைப்படம்

*எங்கே போனாலும் இந்தப் புகைப்படம் உலகப் புகழ்பெற்றதாக ஆகிவிட்டது. எங்கே போனாலும் புகைப்படம், புகைப்படம், புகைப்படம் என்று. இது ஒரு கேவலமான ஒரு புகைப்படம். இந்தப் புகைப்படம் புகழ்பெற்றதற்கு யார் காரணம்? நீங்கள்தான் காரணம், எல்லாவற்றையும் என் மேலேயே எழுதுங்கள். என்னை என்னென்ன திட்டுகிறார் தெரியுமா அவர்? செத்துப் போய்விடுங்கள் என்றார் என்னை. என் உயிரை வாங்குகிறான் என்று சொல்லிவிட்டார்.*

*மீண்டும் மீண்டும் நம் தலைவர் சொல்வதுதான், இந்த முறை மிகப் பெரிய வெற்றி அடையப்போவது உறுதி. இந்தச் சோழிங்கநல்லூரில் சென்ற முறை வாங்கிய வாக்கு வித்தியாசத்தைவிட அதிகமான வாக்கு வித்தியாசத்தில் அண்ணன் அரவிந்த் ரமேஷ் அவர்களை நீங்கள் வெற்றிபெற வைக்க வேண்டும். அடுத்த இரண்டு நாட்கள் தீவிர பிரச்சாரம் செய்யுங்கள்.*

*உங்களை எல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன், உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களியுங்கள். அண்ணன் அரவிந்த் ரமேஷ் அவர்களை அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்துச் சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள்.*

*உங்களின் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி, நன்றி, நன்றி.*

*இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.*

### பங்கேற்றவர்கள்

*அரவிந்த் ரமேஷ், மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் விஸ்வநாதன், பாலவாக்கம் மனோகரன், தொகுதிப் பார்வையாளர் சந்திரபாபு, பாலவாக்கம் சோமு, ஏழுமலை, பஷீர், ஹரிகிருஷ்ணன், ஒன்றிய பகுதி கழகச் செயலாளர்கள் ரவிச்சந்திரன், மதியழகன், வெங்கடேசன், சங்கீதா பாரதிராஜன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பாண்டியன், தியாகராஜன், ஸ்ரீகாந்த், செம்மஞ்சேரி வட்டச் செயலாளர் நாகராஜ், முருகேசன், தனசேகரன், ரவி, அனீஷ், ஹரி, சங்கர், முருகன், ராஜேந்திரன், புஷ்பா, கவிதா, தேவேந்திரன், சேகர், முனுசாமி, அருண் பிரகாஷ், ஆடியோ ராஜ், ராஜேஷ், ராமநாதன், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.*